முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை – 2018 யூலை

# (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

(ECONOMICS FOR BUSINESS AND ACCOUNTING)

2018-07-28
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப்புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரே மொழியில்*** *மட்டும் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். ஏதாவது எடுகோள்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை மாத்திரம் அனுமதிக்கப்படும்.*

(6) ***வரைபுத் தாள்*** *வழங்கப்படும்.*

(7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச்சொல் உள்ளடங்கிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *முதல்* ***1.10*** *வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை வினா இலக்கத்துடன் உங்களது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** குறித்த தீர்மானமொன்றின் தெரிவிலுள்ள முன்பே தீர்மானிக்கப்பட்ட அடுத்த சிறந்த மாற்று வழியின் பெறுமதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) சந்தர்ப்பச் செலவு (Opportunity cost) (2) கணக்கீட்டுக் கிரயம் (Accounting cost)

(3) தவிர்க்கக்கூடிய கிரயம் (Avoidable cost) (4) எல்லைக் கிரயம் (Marginal cost)

**1.2** கேள்விக் கணியத்தின் வீதாசார (%) மாற்றமானது விலையின் வீதாசார மாற்றத்தைவிட பெரியதாக இருப்பின், கேள்வி ஆனது :

(1) நெகிழ்ச்சியற்றதாகும் (2) ஒருமை நெகிழ்ச்சியானதாகும்

(3) நெகிழ்ச்சியானதாகும் (4) பூரண நெகிழ்ச்சியற்றதாகும்

**1.3** தனியான விற்பனையாளர் ஒருவரை மாத்திரம் கொண்ட சந்தைக் கட்டமைப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) தனியுரிமை போட்டி (2) நிறைபோட்டி

(3) தனியுரிமை (4) சிலருரிமை

**1.4** வெளியீட்டின் (output) விகிதசம அதிகரிப்பின்போது அதே விகிதசம அதிகரிப்பு உள்ளீட்டிலும் (input) இருக்குமாயின் அது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) மாறா அளவுத்திட்ட விளைவு (2) அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவு

(3) குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு (4) எல்லை அளவுத்திட்ட விளைவு

**1.5** பின்வருவோரில் யாரைப் பாதுகாப்பதற்காக கட்டற்ற சந்தை முறைமையில் (free market system) அரசாங்கத்தினால் உச்ச விலை (உயர்ந்தபட்ச விலை) நிர்ணயிக்கப்படுகிறது?

(1) நுகர்வோரை (2) உற்பத்தியாளர்களை

(3) இறக்குமதியாளர்களை (4) போட்டியாளர்களை

**1.6** ஒடுங்கிய பண நிரம்பலின் தொகை, வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படுகின்ற கால மற்றும் சேமிப்பு வைப்புகள், வெளிநாட்டு நாணய வைப்புகள் என்பன எவ்வாறு அழைக்கப் படுகின்றன?

(1) விரிந்த பணப் பெருக்கி (Broad money multiplier)

(2) நாணயத் தளம் (Monetary base)

(3) விரிந்த பண நிரம்பல் [Broad money supply ($M_2$)]

(4) திரட்டிய விரிந்த பண நிரம்பல் [Consolidated Broad Money Supply ($M_2b$)]

**1.7** இலங்கை மத்திய வங்கியின் 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கு இணங்க, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை ஆண்டு 2013 = 100) முறையே 109.8 மற்றும் 114.7 ஆகும். இவ்விரு ஆண்டுகளுக்குமிடையிலான பணவீக்க வீதம் (rate of inflation) :

(1) 4.3 % (2) 4.9 % (3) 4.5 % (4) 9.8 %

**1.8** பண அலகு ஒன்றினால் உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவு (quantity) எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) பணத்தின் உள்ளக உண்மைப் பெறுமதி (Internal real value of money)

(2) பணத்தின் உத்தியோகபூர்வமான வெளிப் பெறுமதி (Official external value of money)

(3) பணத்தின் வெளிப் பெறுமதி (External value of money)

(4) பணத்தின் உண்மையான வெளிப் பெறுமதி (Real external value of money)

**1.9** பின்வருவனவற்றில் தேசிய வருமானத்தின் பாய்வுக்கான ஒரு உட்பாய்ச்சலாக (injection to the flow) இருப்பது :

(1) சேமிப்புகள் (2) வரிவிதிப்பு (3) இறக்குமதிகள் (4) ஏற்றுமதிகள்

**1.10** இலங்கை மத்திய வங்கியின் 2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கு இணங்க, 2017 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் :

(1) 3.1% (2) 5% (3) 7.5% (4) 4.5%

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையிலான பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் "**சரியானதா**" அல்லது "**தவறானதா**" என்பதைக் குறிப்பிடுக. உமது விடையினை (சரியானது / தவறானது) வினாவுக்குரிய இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** பொருளியல் என்பது ஒரு சமூக விஞ்ஞானமாகும்.

**1.12** பொருளொன்றின் மேலதிக அலகு ஒன்றினை நுகர்ந்ததன் பின்னர் நபர் ஒருவர் பெற்றுக்கொண்ட திருப்தியானது மொத்தப் பயன் என அழைக்கப்படுகிறது.

**1.13** நிறுவனம் ஒன்றின் குறுங்கால ஓட்டத்தில் உற்பத்திக் காரணிகளை, நிலையான காரணிகளாகவும் மாறும் காரணிகளாகவும் பிரிக்க முடியும்.

**1.14** பணத்திற்கான கேள்வியின் கொடுக்கல் வாங்கல் நோக்கத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையில் நேர்மாறான (negatively) தொடர்பு காணப்படுகிறது.

**1.15** வருமான விளைவு மற்றும் பிரதியீட்டு விளைவு ஆகியன விலை மற்றும் கேள்விக் கணியம் ஆகியவற்றுக்கிடையில் காணப்படும் நேர்மாறான தொடர்புடைமைக்கான இரண்டு பிரதான காரணங்களாகும்.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.16** இலாபம் என்பது ....................... *(முயற்சியாண்மைக்கான / மூலதனத்திற்கான)* ஒரு வெகுமதியாகும்.

**1.17** சந்தைச் சமநிலையில், மிகையான கேள்வி அல்லது மிகையான நிரம்பலொன்று ....................... *(இருக்கும் / இருக்காது)*.

**1.18** ....................... *(சாதாரண (Normal) / தரம் தாழ்ந்த (Inferior))* பொருட்கள் நேர்க் கணிய வருமான (positive income) கேள்வி நெகிழ்ச்சி ஒன்றைக் கொண்டிருக்கிறது.

**1.19** பணக் கேள்வி மற்றும் பண நிரம்பல் வளையிகளின் இடைவெட்டும் புள்ளியில் கணிக்கப்பட்ட வட்டி வீதமானது............... *(சமநிலை வட்டி வீதம் / மிகையான வட்டி வீதம்)* என அழைக்கப்படுகிறது.

**1.20** பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பத்தியின் அதிகரிப்புடன் முழுமையான சமூக முறைமையில் ஏற்படுகின்ற ஒட்டுமொத்த முன்னேற்றமானது ....................... *(பொருளாதார வளர்ச்சி / பொருளாதார அபிவிருத்தி)* என அழைக்கப்படுகிறது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A இன் நிறைவு*

## <u>பகுதி B</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) உற்பத்திச் சாத்திய வளையியின் (PPC) உள்ளார்ந்த எடுகோள்கள் (underlying assumptions) மூன்றினைக் (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(b) முதலாளித்துவப் (சந்தைப்) பொருளாதாரம் மற்றும் பொதுவுடமைப் (திட்டமிடப்பட்ட) பொருளாதாரம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மூன்றினைக் (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(c) பண்டமொன்றின் பின்வரும் கேள்வி ( $Qd$ ) மற்றும் நிரம்பல் ( $Qs$ ) சமன்பாடுகள் உங்களுக்குத் தரப்படுகின்றன :

$$Qd = 80 - 6p$$

$$Qs = -20 + 4p$$

(i) பண்டத்தின் சமநிலை விலையைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(ii) பண்டத்தின் சமநிலைக் கணியத்தைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

(a) மொத்த உற்பத்தி (TP), சராசரி உற்பத்தி (AP) மற்றும் எல்லை உற்பத்தி (MP) ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புடைமையை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) தனியுரிமை மற்றும் தனியுரிமைப் போட்டி ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் நான்கினைக் (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) அரசாங்கமானது பண்டமொன்றிற்கு அலகு மானியமொன்றை (unit subsidy) வழங்குவதால் ஏற்படக்கூடிய விளைவுகளை (consequences) வரைபு ஒன்றின் உதவியுடன் **விபரிக்குக**. (06 புள்ளிகள்)

(b) (i) சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையிடுவதற்கான காரணங்கள் இரண்டினைக் (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(ii) மானியங்கள் வழங்குவதைத் தவிர அரசாங்கமானது சந்தைப் பொருளாதாரத்தில் தலையீடு செய்யும் வழிமுறைகள் இரண்டினைக் (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) **நாடு A** யும் **நாடு B** யும் கோதுமை மற்றும் உருளைக்கிழங்கு ஆகிய இரண்டினையும் உற்பத்தி செய்வதாக கருதிக்கொள்க. வளங்களின் ஒரு அலகைப் பயன்படுத்தி இரண்டு நாடுகளும் உற்பத்தி செய்கின்ற கோதுமை மற்றும் உருளைக்கிழங்கினது அலகுகளின் எண்ணிக்கையினை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| பொருள் / நாடு | கோதுமை (கிலோகிராம்) | உருளைக்கிழங்கு (கிலோகிராம்) |
|---|---|---|
| **A** | 6 | 4 |
| **B** | 1 | 3 |

ஒவ்வொரு பொருளினதும் உற்பத்தியில் ஒப்பீட்டு நயத்தைக் (comparative advantage) கொண்டிருக்கின்ற நாடு எது என்பதை கணிப்பீடுகளின் உதவியுடன் **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதியைக் குறைப்பதால் (devaluation) ஏற்படக்கூடிய விளைவுகள் நான்கினைக் (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B யின் நிறைவு*

## பகுதி C

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

**(A)** (i) இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையின் பண்புசார் கட்டுப்பாடுகள் (qualitative controls) மூன்றினைக் (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(ii) "இரண்டு முரணான நோக்கங்களான (conflicting objectives) திரவத்தன்மைக்கும் (liquidity) இலாபத் தன்மைக்குமிடையில் (profitability) உத்தம சமநிலை ஒன்றைப் பேணுவதில் வங்கிகள் சவால்களை எதிர்நோக்குகின்றன".

மேலுள்ள கூற்றினை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

**(B)** பொருளாதாரம் ஒன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய ஒரு வருட காலப்பகுதிக்கான பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | **ரூ. (மில்லியன்)** |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவுகள் | 1,500 |
| அரசாங்க நுகர்வுச் செலவுகள் | 1,500 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் (Formation) | 3,000 |
| நிகர (Net) ஏற்றுமதிகள் | 2,500 |
| வெளிநாட்டிலிருந்தான நிகரக் காரணி வருமானம் (நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம்) | 750 |
| மூலதனப் பெறுமானத்தேய்வு | 1,000 |

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியவை,**

பின்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) மொத்த உள்நாட்டுச் செலவு (Gross Domestic Expenditure) (04 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(c) மொத்த தேசிய உற்பத்தி (GNP) – சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(d) நிகர தேசிய உற்பத்தி (NNP) – சந்தை விலையில் (02 புள்ளிகள்)

**(C)** அரசாங்கத்தின் பேரினப் (macro) பொருளாதார நோக்கங்கள் மூன்றினைக் (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C யின் நிறைவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |